**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**
<u>முன்னிலை : திருமதி.P.சுபாஷினி, பி.ஏ., பி.எல்.,</u>
<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.</u>

<u>2021ம் வருடம் மார்ச் திங்கள் 15ம் நாள் திங்கள்கிழமை</u>
**<u>ஐ.ஏ.எண்.1/2019 இன் அ.வ.எண்.307/2016</u>**

K.முத்துவேல் ... மனுவாதி/வாதி

/ எதிர் /

1.சபரிநாதன்
2 மாவட்ட ஆட்சியர் கோயமுத்தூர்
3.வட்டாட்சியர், பொள்ளாச்சி ....எதிர்மனுவாதிகள்/பிரதிவாதிகள்
4.தமிழ்நாடு மின்சாரவாரியம்
வடக்கிபாளையம் ....கட்சிசேர்கப்பட வேண்டிய நபர்

இம்மனுவானது கடந்த 23.02.2021 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.R.வித்யாசாகர், அவர்கள் ஆஜராகியும், 1 எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ரசீன், அவர்கள் ஆஜராகியும், 2,3 மற்றும் 4ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.சம்பத்குமார், அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட....

**<u>ஆணையுரை</u>**

இம்மனுவானது, வடக்கிபாளையம் மின்பகிர்மான கழகமான தமிழ்நாடு மின்சார வாரியத்தை 4ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10 மற்றும் பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர் மனு சங்கதியின் சுருக்கம் :</u>**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மனுச் சொத்தானது 70 வருடங்களாக மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தினரின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வந்து, மனுதாரரின் தகப்பனார் இறந்தவுடன் மனுச்

சொத்தானது சட்டப்படியான வாரிசுதாரர்கள் என்ற முறையில் மனுதாரருடைய சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வருகிறது. 1ம் எதிர்மனுவாதியும் அவரது மனைவியும் மனுதாரர் அனுமதியுடன், மனுதாரர் செலவில் ஏற்படுத்திய சிமெண்ட் ஷெட்டில் குடியிருந்தனர். 1ம் எதிர்மனுவாதியானவர் மேற்படி மனுச் சொத்தில் குடியிருக்க வாடகை ஏதும் மனுதாரர் பேசவில்லை. 16.10.2012–ம் தேதி 1ம் எதிர்மனுவாதியானவர் 3ம் எதிர்மனுவாதிக்கு விண்ணப்பித்து மனுச் சொத்தினை அபகரிக்கும் எண்ணத்துடன் பொய்யான தகவல்களை கூறி பட்டா கேட்டு விண்ணப்பித்துள்ளார். எனவே 1ம் எதிர்மனுவாதியை உடனே மனு சொத்திலிருந்து காலி செய்ய பலமுறை மனுதாரர் நேரிலும் பஞ்சாயத்திலும் பேசிய பொழுது 1ம் எதிர்மனுவாதி மனுச் சொத்திலிருந்து காலி செய்யவில்லை. 23.08.2015–ம் தேதி வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேலும் அசல் வழக்குடன் 2,3 எதிர்மனுவாதிகள் அசல் வழக்கு முடியும் வரை வருவாய் துறை ஆவணங்களில் 1ம் எதிர்மனுவாதிக்கோ அல்லது வேறு எந்த ஒரு 3ம் நபருக்கோ பெயர் மாற்றம் செய்யக்கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனுவானது தாக்கல் செய்துள்ளார். மேலும் மனுதாரர் கட்டியுள்ள இடத்திற்கு மின் இணைப்பு வேண்டி 1ம் எதிர்மனுதாரர் முயற்சி செய்து வருகிறார். இதற்கிடையே 1ம் எதிர்மனுவாதியின் மனைவி சிவசக்தி பெயரில் உயர்நீதிமன்றம் சென்னையில் W.P.No.5368/2018–ல் மனுதாக்கல் செய்தனர் அந்த மனுவிற்கு எதிராக மனுதாரர் W.P.No.9567/2018 என்ற மனுதாக்கல் செய்து அந்த மனுவில் மனுதாரருடைய அறிவிக்கையை கேட்காமல் மின் இணைப்பு ஏதும் தரக்கூடாது என்றும் மனுதாரர் உத்தரவு பெற்றுள்ளார். இந்நிலையில் 1ம் பிரதிவாதியும் அவரது மனைவியான சிவசக்தியும் தமிழ்நாடு மின்சார வரியத்தை அணுகி மின் இணைப்பு பெற முயற்சி செய்து வருகின்றனர். எனவே இவ்வழக்கில் மின்சார வாரியத்தையும் ஒரு தரப்பினராக கட்சி சேர்க்க வேண்டும். எனவே, இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 1ம் <u>எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :</u>**

மனுதாரர்களின் மனு பொய்யும், சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மனுவிலும், மனுவுடன் ஒப்புவித்துள்ள அபிடவிட்டிலும் கண்டுள்ள மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். புல எண்.419/25 என்ற இடமானது புறம்போக்கு இடமாகும். மனுவாதியின் குடும்பத்தார் சொத்து என்று குறிப்பிட்ட நிலையில் குடும்பத்தார் யார் என்றும் அவர்கள் பெயர் பற்றியும் விளக்கப்படவில்லை. மனுச் சொத்தானது கடந்த 1943-ம் ஆண்டிற்கு முன்னிருந்தே மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தினரின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருகிறது என்பதை மனுதாரர் நிரூபிக்க வேண்டும். எதிர்மனுவாதி வருவாய்துறை அலுவலகத்தில் அவரது குடும்பம் கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக குடியிருந்து வருவதை பொருத்து பட்டா கோரி விண்ணப்பித்ததிற்கு மனுவாதி தன்னுடைய அதிர்ச்சியை வெளிப்படுத்த எவ்வித சட்டமும் இல்லை. மின் இணைப்பு பெற முயற்சி செய்வதாகவும், அதனால் ஒரு தரப்பினராக மின்சார வாரியத்தை சேர்க்க மனு தாக்கல் செய்து பரிகாரம் கேரரியிருப்பது செல்லதக்கதல்ல. 1ம் பிரதிவாதி அவரது பெயருக்கு ஏற்கனவே மின்சார இணைப்பு பெற்றுவிட்டார். எனவே, அவர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டியது இல்லை. எனவே, இம்மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4) 2முதல் 4ம் எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்சம் ஆக்கப்பட்டுள்ளார்.

**5)** இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**6)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

**7) <u>பிரச்சினை</u>** :

இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்ததில், இம்மனுவானது மனுதாரர் தரப்பில் வடக்கிபாளையம் தமிழ்நாடு மின்சார வாரியத்தை 4ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்க வேண்டும் என்றும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கின் தன்மையை பரிசீலனை செய்யும் போது அசல் வழக்கானது மனுதாரரால் 1ம் பிரதிவாதி மீது தாவா சொத்தின் சுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் 1ம் பிரதிவாதி 4 ம் பிரதிவாதியை அணுகி மின் இணைப்பு பெற முயற்சி செய்து வருவதால் அவரையும் இவ்வழக்கில் கட்சி சேர்க்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்தானது 15 ஆண்டுகளுக்கு மேலாக 1ம் எதிர்மனுதாரருடைய அனுபவத்திலும் சுவாதீனத்திலும் உள்ளது என்றும், ஏற்கனவே 1ம் எதிர்மனுதாரர் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் மின்சார இணைப்பு அவரது பெயருக்கு பெற்று மின்கட்டணங்களை செலுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார். தாவா சொத்தானது யாருக்கு பாத்தியப்பட்டது குறித்தும், அதன் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் யார் உள்ளனர் குறித்தும் அசல் வழக்கில் இரு தரப்பிலும் தாக்கல் செய்யப்படும் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் மூலமே தீர்வு காண இயலும் 1ம் எதிர்மனுதாரர் அவரது பெயருக்கு மின்சார இணைப்பு பெற்றுள்ளார் என்பதற்கு எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. மேலும், இவ்வழக்கில் வடக்கிபாளையம் தமிழ்நாடு மின்சார வாரியம் ஒரு தரப்பினராக சேர்க்கப்படுவதால் 1ம் எதிர்மனுதாரருக்கு இழப்பு ஏதும் ஏற்பட போவதில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

எனவே, மனுதாரருக்கு நேரிய வழக்கு விசாரணைக்கு ஒரு வாய்ப்பு வழங்கும் விதமாக நீதியின் நலன் கருதி 4ம் எதிர்மனுதாரர் அவர்கள் அசல் வழக்கில் 4ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்கப்பட வேண்டும் என்றே இந்நீதிமன்றம் கருதி, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு அதன்படியே இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

8) முடிவில், இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வாணையுரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்து பிழை நீக்கம் செய்ததை என்னால் இன்று (15.03.2021) அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/—(சுபாஷினி)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு</u>**
**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

..... இல்லை .....

ஒப்பம்/—(சுபாஷினி)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

-----------------------------------

**அசல் / வரைவு ஆணையுரை**

ஐ.ஏ.1/2019 இன் ஓ.எஸ்.307/2016

நாள் : 15.03.2021

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

பொள்ளாச்சி

-----------------------------------